**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, ERODE

**CALENDAR CASE NO.375/2024**

2026ம் ஆண்டு ஜீன் மாதம் 29–ம் தேதியன்று அரசு சாட்சியாக விசாரிக்கப்படும் இவ்வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54–வது சட்டத்திலுள்ள 6(2) பிரிவுகளின்படி திருமதி.Dr.V.ஸ்ரீவித்யா, தலைமை நீதித்துறை நடுவர், ஈரோடு அவர்களால் ஆணையிடப்பட்டு, திரு.P.கோவிந்தசாமி, பலகை எழுத்தர் நிலை –II அவர்கள் மூலமாக சத்திய பிரமாணம் செய்யப்பட்டு, சாட்சியிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | –திரு.காசிலிங்கம் | PW–2 | தொழில் | – |
| த/க பெயர் – | | | வயது | – |
| அலைபேசி – | | | முகவரி | – |
| ஆதார் எண் – | | | | |

**(எதிரி ஆஜர் )**

**<u>முதல் விசாரணை:</u>–**

1) நான் தற்போது சித்தோடு காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்த வழக்கு சம்பந்தப்பட்ட விவரங்கள் எனக்கு கோப்புகளின் அடிப்படையில் தான் தெரியும் கோப்புகளின் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன். இந்த வழக்கின் விசாரணை அதிகாரியான முருகையன் எனக்கு நன்கு தெரியும் அவருடைய கையெழுத்து எனக்கு நன்கு பரிட்சயம். கடந்த 31.12.2022 ஆம் தேதி அன்று காலை 10:45 மணிக்கு சித்தோடு ஆட்டையம் பாளையம்

Dr.V.Sree Vidya Date: 2026.06.29 19:05:03 +0530

சண்முகா கெமிக்கல் கம்பெனி அருக மாதேஸ்வரன் என்பவர் தன்னுடைய TN 56 R 5978 என்ற எண் கொண்ட மோட்டார் சைக்கிளை வடக்கிலிருந்து தெற்காக ரோட்டின் இடது புறமாக ஓட்டி வந்தபோது அதே திசையில் வடக்கிலிருந்து தெற்காக எதிரி சண்முகம் அரசு பேருந்தை அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் உயிருக்கு ஆபத்து ஏற்படும் வகையில் ஓட்டி மாதேஸ்வரனின் பைக் மீது மோதி வாகன விபத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்றும் அந்த சம்பவத்தின் விளைவாக எதிரி ஓட்டி வந்த பஸ் ஆனது மாதேஸ்வரன் ஓட்டி சென்ற மோட்டார் சைக்கிள் மீது மோதி மாதேஸ்வரனுக்கு தலை மற்றும் கழுத்து ஆகிய இடங்களில் பலதரப்பட்ட காயங்கள் ஏற்பட்டன என்றும் அதன் அதிர்ச்சியிலும் ரத்தப்போக்கிலும் மரணம் ஏற்பட்டது என்றும் காவல் நிலையத்தில் ரேவதி என்பவர் ஆஜராகி கொடுத்த புகாரினை பெற்று உதவி ஆய்வாளர் புகாரினை பெற்று எதிரி மீது இதச பிரிவு 279, 304(A) ஆகிய பிரிவுகளின் கீழ் குற்ற எண் 572/2022 என்ற எண்ணில் வழக்கு பதிவு செய்து முதல் தகவல் அறிக்கை தாக்கல் செய்தார்.

2) அதன் பின்பு ஆய்வாளர் முருகையன் சம்பவயிடம் சென்று பார்வையிட்டு சம்பவ இட சாட்சிகளான கோகுல் மற்றும் கார்த்திகேயன் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் வரைபடம் தயார் செய்தார். ரேவதி, ரேணுகாதேவி, மகேஷ், கணேசன், கோபிநாத், மனோஜ்குமார், பாண்டியன் ஆகியோரை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பார்வை மகஜர் சாட்சிகளான

Dr.V.Sree Vidya Date: 2026.06.29 19:05:09 +0530

கோகுல் மற்றும் கார்த்திகேயன் ஆகியோரிடமும் வாக்குமூலம் பதிவு செய்து சாட்சி கையொப்பம் பெற்றார்.

3) மேலும் மோட்டார் வாகன ஆய்வாளர் திரு கதிர்வேல் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். அவரிடம் இருந்து வாகனங்களை ஆய்வு செய்து ஆய்வு அறிக்கையைப் பெற்றுக் கொண்டார். அதன் பின்பு அரசு பெருந்துறை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை சார்ந்த அரசு மருத்துவர் கமலாபதி என்பவர் வசம் இறந்து போன நபரின் இறப்பு குறித்து விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். அவரிடம் இருந்து விபத்து பதிவேடுக்கான நகலை பெற்றுக் கொண்டார். மேலும் உதவி பேராசிரியர் சட்டம் சார்ந்த மருத்துவதுறை பெருந்துறை அரசு ஈரோடு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையை சார்ந்த அரசு மருத்துவர் டாக்டர் நந்தகுமார் என்பவரை பிரேத பரிசோதனை செய்ததற்காக விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார். அவரிடம் இருந்து பிரேத பரிசோதனை சான்று பெற்றுக் கொண்டார். மேலும் தன்னுடைய விசாரணையின் போது பிரேத பரிசோதனைக்கு பிரேதத்தை உட்படுத்திய திரு நாச்சிமுத்து தலைமை காவலர் 269 என்பவரையும் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். தன்னுடைய விசாரணை முடித்துக் கொண்டு எதிரி மீது இதச பிரிவு 279, 304(A) ஆகிய பிரிவுகளின் கீழ் கடந்த 10.01.2023 தேதி அன்று குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்தார்.

Dr.V.Sree Vidya Date: 2026.06.29 19:05:15 +0530

4) முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.2**.

5) மாதிரி வரைபடம் **அ.சா.ஆ.3**.

6) பார்வை மகஜர் **அ.சா.ஆ.4**.

7) பிரேத விசாரணை அறிக்கை **அ.சா.ஆ.5**.

8) பிரேத பரிசோதனை அறிக்கை **அ.சா.ஆ.6**.

9) மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் 2 எண்ணிக்கை **அ.சா.ஆ.7**.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-

சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் விபத்து ஏற்படவில்லை என்று சொன்னால் சரியல்ல. கோப்புகளின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளிக்கிறேன். விபத்தை பார்த்தற்கு நேரடியான சாட்சியம் இல்லாத நிலையில் சொன்ன விதத்தில் விபத்து ஏற்பட்டு இருப்பதாக நான் என்னுடைய கூற்று ஏற்றுக்கொள்ள தகுதி அல்ல என்று சொன்னால் சரியல்ல. போலீசார் சம்பவ இடத்தை நேரில் பார்வையிட்டு பார்வை மகஜர் தயாரிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்று சொன்னால் சரியல்ல. சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரி மீது தவறான குற்றப்பத்திரிகை தாக்கல் செய்திருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல.

Dr.V.Sree Vidya

Date: 2026.06.29 19:05:21 +0530

**சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எதிரியை கைது செய்யப்படவில்லை என்று சொன்னால் சரியல்ல.**

**மறுவிசாரணை இல்லை.**

Taken down before me in open court read over to the witness in the presence of accused. Pleaded and admitted by him/her to be correct.

Dr.V.Sree Vidya
Date: 2026.06.29 19:05:28 +0530

Chief Judicial Magistrate,
Erode.